செ.வெ.எண்:99/ செப்டம்பர்/2020 நாள்:29.09.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கான இணையதள(WEBINAR) இலவச வகுப்பு வருகின்ற 01.10.2020 முதல் நடைபெறவுள்ளது. விருப்பம் உள்ள இளைஞர்கள் tcdonline2020@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு விருப்பத்தை தெரிவிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------------

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நடத்தப்படவுள்ள இரண்டாம் நிலை காவலர்(மாவட்ட மற்றும் மாநகர ஆயுதப்படை - ஆண், பெண் மற்றும் மூன்றாம் பாலினம்) / இரண்டாம் நிலை சிறைக் காவலர்(ஆண் மற்றும் பெண்) / தீயணைப்பாளர்(ஆண்) ஆகிய 10,906 பணியிடங்களுக்கான எழுத்துத்தேர்வு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது. இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்: 26.10.2020 ஆகும்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்கு விண்ணப்பித்து தேர்வினை வெற்றிகரமாக எதிர்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிலுள்ள இளைஞர்கள் தன்னார்வ பயிலும் வட்டத்தால் நடத்தப்படும் TNSURB போட்டித்தேர்வுக்கான இணையதள(WEBINAR) இலவச வகுப்பு 01.10.2020 முதல் நடத்ததப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெற விருப்பம் உள்ள இளைஞர்கள் tcdonline2020@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு விருப்பத்தை தெரிவிக்கும்படியும், தேர்வு எழுதும் மாணவர்களின் வசதிக்காக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் போட்டித் தேர்வுகளுக்கான ஆதார நூல்கள் அடங்கிய நூலக வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், விவரங்களுக்கு 94990-55902 மற்றும் 70103-70567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேலைநாடுநர்கள் மேற்கண்ட இணையதள சேவைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**